## சென்னை மெட்ரோ ரயில் நிறுவன தலைமையகத்தில்

# ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி துணைத்தலைவர் ஆய்வு

**சென்னை, ஆக.10:** சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் துணைத்தலைவர் டி.ஜே. பாண்டியன் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியா, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின்(ஏஐஐபி) முதலீட்டு செயல்பாடுகளுக்கான துணைத்தலைவர் டி.ஜே.பாண்டியன் சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்துக்கு செவ்வாய்க்கிழமை வருகை தந்தார். பின்னர், அங்கு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, சென்னை மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் அதன் வசதிகள் குறித்து அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த ஆய்வில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் கலந்துகொண்டு, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டம் தற்போதைய நிலை குறித்தும், குறிப்பாக ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன் கட்டமைக்கப்படுகின்ற வழித்தடம் 4 மற்றும் வழித்தடம் 5 -இன் எஞ்சிய உயர் மட்டத் தொகுப்பின் நடைபெற்று வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் ஆரம்ப கட்டப்பணிகள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்.



சென்னை, கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத் தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் துணைத் தலைவர் டி.ஜே.பாண்டியன். உடன் சென்னை மெட்ரோ ரயில் நிலையத் தலைமை இயக்குநர் பிரதீப் யாதவ் மற்றும் உயரதிகாரிகள்.

இதன்பின்பு, கோயம்பேட்டில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனப் பணிமனை நிர்வாகக் கட்டடத்தில் அமைந்துள்ள செயல்பாடு கட்டுப்பாட்டு மையத்தை டி.ஜே. பாண்டியன் பார்வையிட்டார். மேலும், கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் வரை ரயிலில் பயணம் செய்தார்.

இந்த ஆய்வின்போது, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உயர் முதலீட்டு செயல்பாட்டு நிபுணர் அமித்குமார், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர் (நிதி) சுஜாதா ஜெயராஜ், நிறுவனத்தின் இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்)ராஜேஷ் சதுர்வேதி, இயக்குநர் (திட்டங்கள்) டி.அர்ச்சுனன் உள்பட பலர் உடனிருந்தனர்.